முல்லா பீடிகள்
MULLA BEEDIES JAFFNA
முல்லா பீடிகள்
முல்லா பீடி ஜவ்னா
TRADE MARK REGD. NO. 24566
MULLA BEEDI CO. JAFFNA

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (17-7-66) இதழ் 157

பராபவ ஆடி 1 | ரபி அவ் 27 | ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

# தீண்டாமையை ஒழிக்க சட்ட நடவடிக்கை

## வரவேற்பு கூட்டத்தில், மந்திரி திருச்செல்வம் வாக்குறுதி

(நமது நிருபர் கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தீண்டாமையை ஒழிக்க சட்டமூலம் நடவடிக்கை எடுப்போம். அதற்குமுன் நாட்டின் வரலாற்றில் பெரும் மாறுதல் ஏற்படும். நாங்கள் எதிர்பார்க்கும் மாறுதலும், எங்கள் நேக்கமும் மலைநாட்டில்வாழும் தமிழ் மக்களை, வடக்கு—கிழக்கு மாகாணங்களில் குடியேற்றி எங்களைப் பலப்படுத்துவதுதான். இன்னும் 15 அல்லது 20 வருடங்களில் மலைநாட்டுத் தமிழர் வடக்கு—கிழக்கில் குடியேறியபின், தானகவே தீண்டாமை, சாதிப்பேய் ஒழிந்துவிடும்".

யாழ்ப்பகணம் நகரமண்டபத்தில் நேற்றுமாலை நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் பேசும்போது ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினர்.

மந்திரி எம். திருச்செல்வத்திற்கும் தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேல் சபைஉறுப்பினருக்கும் மக்கள் முன்னேற்ற மன்றத்தினல், வரவேற்பு அளிக்கப்பட்டது.

வாடி வீட்டுச் சந்தியிலிருந்து மந்திரி எம். திருச்செல்வம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி நாகநாதன் மற்றும் தமிழரசு கட்சி எம்.பிக்களும், மேற்சபை உறுப்பினர்களும் மேளவாத்திய ஊர்வலமாக நகரமண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நகர மண்டப வாசலில், பூரண கும்பம் வைத்து, வெடிகொளுத்தி வரவேற்கப்பட்டார்கள்.

திரு. யோ. ஞானப்பிரகாசம்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆகஸ்ட் 9-ல் பிரதமர் யாழ். நகர் வருவார்

### காங்கிரஸ் அழைப்பை ஏற்றுக்கொண்டதாக தகவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட்மாதம் 7-ம், 8-ம், 9-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 21-வது வருடாந்த மகாநாட்டின் இறுதி நாளன்று பிரதமர் டட்லிசேனநாயக்கா கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார். இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி தேசிய அரசாங்கத்தை சேர்ந்த மந்திரிகளுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமானுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் பொதுச் சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

### அழைப்பை பிரதமர் ஏற்றுள்ளார்

ஏற்கனவே வவனியாவில் நடத்த திட்டமிட்டிருந்த மகாநாட்டில் பிரதமர் கலந்துகொள்வதால், தமிழ் மக்களின் தலைநகராகிய யாழ்ப்பாணத்திலே நடத்த வேண்டும் எனக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு வவனியா மக்கள் பூரண ஒத்துழைப்பை அளிப்பார்கள் என்றும், வவனியாவிலிருந்து 2000 வாலிபர்களின் சைக்கிள் ஊர்வலமொன்று மகாநாட்டிற்குச் செல்லுமென்றும் வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் கூறினர்.

மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தமிழ்க்காங்கிரஸ் விடுத்த அழைப்பை பிரதமர் டட்லி சேனநாயக்கா ஏற்றுக்கொண்டாரென வவனியா எம். பி. தெரிவித்தார்.

### வரவேற்பு ஏற்பாடுகள்

பிரதமரையும் மந்திரிகளை

(6-ம் பக்கம் பார்க்க)

## கல்முனை மகாநாடு

## தீர்மானங்களை அமுல்செய்ய உபகுழுக்கள் நியமனம்

### தமிழரசு செயற்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

உத்தேச மாவட்டசபைகள்பற்றிய நகல் மசோதா அம்சங்களை நேற்று இங்கு நடைபெற்ற தமிழரசுக்கட்சி செயல்கமிட்டிக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன. இதனுடன் தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ் மொழி விசேஷ சட்டவிதிகள், சாதிப்பிரச்னை, பொருளாதார அபிவிருத்திகள், இளைஞர் குடியேற்றத் திட்டம் ஆகியவைபற்றியும் பரிசிலனை செய்யப்பட்டு பல குழுக்களும் நியமிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சி தலைமைக் காரியாலயத்தில் கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் நேற்றைய கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு உள்ளூராட்சி மந்திரிசெனட்டர் எம். திருச்செல்வம் மற்றும் தமிழரசு எம். பி.க்களும் வந்திருந்தனர்.

நேற்றுக் காலையில் நடைபெற்ற கூட்டத்தில், அண்மையில் கல்முனையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பத்தாவது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களும் ஆலோசிக்கப்பட்டதுடன் இதனை அமுல் நடத்துவது குறித்தும் ஆரா

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரி. பிரஜாவுரிமை: "எமில்" ரத்துசெய்வார்

கொழும்பு, சனி

திரு. எமில் சவுந்திரநாயகம் தமது பிரிட்டிஷ் பிரஜாவுரிமையை ரத்துசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

பிரிட்டனில் திவாலாகிப் போன ஒரு இன்சூரன்ஸ் ஸ்தாபனத்தின் விவகாரங்களில் சமீபகாலத்தில் திரு. எமில் சவுந்திரநாயகத்தின் பெயர் பலமாக அடிபட்டது. சூரிச் நகரில் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்று வந்த இவர் திடீரென தலைமறைவாகி விட்டதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் பரபரப்பாக செய்திகள் வெளியிட்டிருந்தன.

லண்டனிலுள்ள இவரது மனைவியும் குழந்தைகளும் இப்போது இலங்கைக்கு வர இருக்கிறார்கள் என்றும் அறியப்படுகின்றது.

## சதிவழக்கு எதிரிகள்


கொழும்பு, சனி

கடந்த பெப்ரவரிமாதம் நடைபெற்றதாகக் கூறப்படும் சதிமுயற்சி சம்பந்தமாக அட்டோர்ணி ஜெனரலினல் தாக்கல் செய்யப்பட்ட சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு:

(1) வண எச் ஞானசிக தேரோ, (2) சுனில்ஹேவகே என்றழைக்கப்படும் பி டி. பெர்ணாண்டோ (3) ஜே எம் விக்கிரமசிங்க (4) ஏ. றிச்சார்ட் உடுகம (5) காப்டன் எல் சிஹேரா (6) லான்ஸ் கோப்ரல் ஏ ஏ. வை அமரதுங்க, (7) சார்ஜன்ட் எச். எம் ஹொந்தமுனி, (8) ஸ்டாவ் சார்ஜன்ட் எச் எம் அமரசேகர பண்டார (9) லான்ஸ் கோப்ரல் டி அபேரத்ன மாயாதுன்ன, (10) சார்ஜன்ட் எச். ஏ ஏ டி சில்வா (11) சார்ஜன்ட் கே. டி. சிறிசேன, (12) கோப்ரல் டபிள்யூ ஏ லொக்கு பண்டா, (13) லான்ஸ் கோப்ரல் ஜே ஜினசிறிதர்மசேன (14) சார்ஜன்ட் குணதாச சிறிவர்த்தன (15) கோப்ரல் சில்வெஸ்டர் பட்டுவத்த (16) சார்ஜன்ட் நொரிஸ் கோரலகே (17) சார்ஜன்ட் எம். ஹெண்டிக்சிங்கோ (18) கோப்ரல் எல்லியனகே ரூபசிங்க (19) லான்ஸ் கோப்ரல்ஏ விஜயக்கோன், (20) கோப்ரல் ஈ முதியான்ஸே லாகே விஜேரத்ன (21) சார்ஜன்ட் ஜே கே டி சிறிசேனஜயசுந்தரா. (22) எல் பொகஹவத்த கே பியசேன (23) கோப்ரல் பியசேன அபேவிக்கிரமா (24) பிரைவேட் ஏ எம். பியதாசா (25) பி டயஸ் குணசேகரா (26) டபிள்யு டென்னிஸன் சொய்சா (27) கே ஏ. கம்பொல (28) டொன் ரத்தபால.

## வருந்துகிறோம்

சென்ற மே மாதம் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை "ஈழநாடு" பத்திரிகையில் மாணவி கடத்தல் வழக்கு; எதிரி விடுதலை என்ற தலைப்புடன் சில பிரதிகளில் வெளியான செய்தி முற்றிலும் ஆதாரமற்றது. அவ்வித செய்தி வெளியானமைக்காக மிகவும் வருந்துகிறோம். மேலும் அம்மாணவிக்கும், அவர் பெற்றோருக்கும் எங்கள் மனமார்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
(நூதன சாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மச்சரியம் என்பது என்ன? பிரம்மா அல்லது தெய்வத்திடம் கொண்டுசெல்லக்கூடியவாழ்க்கைநெறி தான். அந்தக் கட்டுப்பாடு மனம், மொழி, மெய்யாலானதாக இருத்தல் அவசியம். மனது அடங்காவிடில், மற்றதால் பயனில்லை. மனதை அடக்கக் கூடியவருக்கு, இது மிகவும் எளிது.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி 1 (17-7-66)

## வேலைக்காரச் சிறுவர்கள்

ஆறு வயதுச் சிறுமி ஒருத்தி உடலெல்லாம் காயங்களுடன் தனது சோகக் கதையை பொலிசாருக்குச் செய்த முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறாள். மற்றொரு சிறுமி சில தினங்களுக்கு முன் காயங்களுடன் மரணமானாள். இவைதவிர சில சிறுவர் சிறுமியரின் பரிதாபச் சம்பவங்கள் நீதிமன்றங்களில் நடைபெற்றுள்ள சில வழக்கு விசாரணைகளின் போது வெளியாகியிருக்கின்றன. வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட இவர்கள், வீட்டு எஜமானர், எஜமானியர் தங்களுக்கு இழைத்த கொடுமைகள் தான் இந்தச் சோகக் கதைகளாகும்.

பல வீடுகளில் வேலைக்கு சிறுவர் சிறுமியரை அமர்த்துகின்றனர். எல்லோரும் கொடுமையாக அவர்களை நடத்துகின்றனர் என்று சொல்ல முடியாது ஆனாலும் சில சம்பவங்களே அம்பலத்துக்கு வருவதால் வெளியில்வராத சம்பவங்களும் இருக்கக்கூடும். வீடுகளில் வேலைசெய்து வாழ வேண்டுமென்று வசதியுள்ள குடும்பங்களின் பிள்ளைகள் விரும்புவதில்லை. தங்கள் பிள்ளைகள் வீடுகளில் வேலை செய்துதான் வாழ வேண்டுமென வசதியுள்ள பெற்றோர் விரும்ப மாட்டார் ஒரு வேளைச் சோற்றுக்கே கஷ்டமுறும் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள்தான் வீடுகளில் வேலை செய்யச் செல்கின்றனர். இப்பிள்ளைகளை தங்கள் வீட்டு வேலைகளுக்கு உதவியாக வைத்துக் கொள்வதுடன் அவர்களின் நிலையை உணர்ந்து கருணையுள்ளத்துடன் நடத்த வேண்டியதும் அவர்களின் கடமையாகும்.

தங்கள் வேலைகளைத் தாங்களே செய்து கொள்ள வேண்டும். அதில் இழுக்கு ஒன்றுமில்லை. ஆள் உதவியில்லாதவர்கள், தங்களால், தங்கள் வீட்டு வேலைகளைக் கொண்டு செலுத்த முடியாதபோது உதவிக்கு வீட்டுவேலைகளுக்கென ஆட்களை அமர்த்திக் கொள்ளுவதில் தவறு இல்லை. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரை வீட்டில் பணியாளராக அமர்த்திக் கொள்ளும் வசதிபடைத்தவர்கள், தங்கள் பிள்ளைகளைப்போல், அந்தப் பிள்ளைகளைச் சமமாகக் கவனிக்காவிட்டாலும் மனிதாபிமானத்துடன், அவர்களையும் ஜீவனாகக் கருதிப்பார்க்க வேண்டும். ''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பது தமிழ்ப் பழமொழி. வேலைக்கு அமர்த்தும் ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்க்க வேண்டாம், நேரத்துக்கு உணவும் உடையும் கொடுத்து, கொடுமைப்படுத்தாமல் விட்டாலே போதும். வேலைக்கு அமர்த்தும் சிறுவர், சிறுமியர் விஷயத்தில் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள முடியாவிட்டால், அந்தச் சிறுவர், சிறுமியர் தங்கள் சொற்படி, தங்கள் விருப்பப்படி வேலைகளைச் சரிவரச் செய்யாவிட்டால், அவர்களைச் சொல்லித் திருத்த முடியாவிட்டால், அவர்களை அவர்களது பெற்றோரிடமோ, உற்றாரிடமோ திருப்பி அனுப்பிவிடலாம். இதுவே முறை. இதை விடுத்து அந்த அப்பாவிகளை அடித்துக் காயப்படுத்துவதும், குறிசுடுவதும் நியாயமல்ல; பெரிய பாவமும்கூட. இந்தக் கொடூரமான 'தண்டனைகளின்' விளைவுதான் பின்னர் கோரச் செயல்களாகவும் நீதிமன்றத்தில் வழக்குகளாகவும் பிரதிபலிக்க ஏதுவாகின்றன.

இதேசமயம் ஒருநேர உணவுக்கே கஷ்டப்படும் குடும்பங்களும், அக்குடும்பங்களின் குழந்தைகள் ஊரார் வீடுகளில் வேலைசெய்து கஷ்டப்படுவதைத் தவிர்க்கவும், அந்தக் குடும்பங்களும், குழந்தைகளும் வாழவும் அரசாங்கமும், சமயசமூக ஸ்தாபனங்களும் நல்ல திட்டம் வகுத்து அமுல் நடத்த முன்வரவேண்டும். பிச்சைக்காரர் தொல்லையை ஒழிக்க அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க, சமூகசேவை அமைச்சர் திட்டம் ஒன்று கொண்டுவர இருப்பதாகச் சில மாதங்களின் முன்னர் தெரிவிக்கப்பட்டது. இது வரவேற்க வேண்டியதே. ஆயினும் பிச்சைக்காரர் மட்டுமல்ல, இனியும் பிச்சைக்காரர்களாக மாறக்கூடிய நிலையிலுள்ளவர்களும், மானத்துக்கு அஞ்சிப் பிச்சையெடுக்காமல் பல வீடுகளிலும், சொல்லடியும், பொல்லடியும் படும் சிறுவர்களும், பெரியோர்களும் வாழ்வதற்கும் வழிகாணவேண்டியது அவசியம்.

## விமானப்படை உஷார்

கெய்ரோ, ஜூலை 16

இஸ்ரேல் விமானங்கள் சிரியாவில் குண்டுவீச்சு நடத்தியதைத் தொடர்ந்து ஐக்கியஅராபியக் குடியரசு தனது விமானப்படையை உஷார்ப்படுத்தியிருக்கிறது. ஈராக், ஜோர்டான் ஆகிய நாடுகள் இவ்விஷயமாக சிரியாவுக்கு அதரவு தெரிவித்திருக்கின்றன.

## கதிர்காம உற்சவம்

உரும்பராய், சனி

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் கதிர்காம உற்சவம் இம்மாதம் 18-ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் இரண்டாம் திகதி தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும்.

## "இசையின் புனிதத் தன்மையை கலைஞர்கள் பாதுகாக்க வேண்டும்"

### இசை அரங்கேற்ற விழாவில் பேச்சு

சுழிபுரம், சனி

''இன்று சினிமாக்கலை இசைக் கலையின் புனிதத் தன்மையை வெகுவாகக் கெடுத்துவிட்டது. தமிழன் கலையை ஆன்ம ஈடேற்றத்திற்காககொண்ட நிலையையும் மாற்றியமைத்துவிட்டது. தமிழிசை மீண்டும் ஆன்ம ஈடேற்றத்துக்காக உபயோகிக்கப்படவேண்டும் அப்போது தான் அது மீண்டும் சிறப்படையும்'' என்று சங்கீத பூஷணம் திரு. எஸ். கலியுகவரதனின் வயலின் இசை அரகேற்ற விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய முதலியார் செ. சின்னத்தம்பி தமது உரையில் குறிப்பிட்டார். விழாவுக்கு அகில இலங்கை ஆயுள்வேதச் சங்கத் தலைவர் திரு. ஆ. க. குமாரசாமி ஜே. பி. தலைமைவகித்தார்.

திரு. செ. சின்னத்தம்பி மேலும் பேசுகையில், தமிழன் கலையை நல்வாழ்வுக்காகப்பயன்படுத்தி தெய்வநிலை கூடினான், ஞானசம்பந்தர் போன்றவர்கள் இசைக் கலையை தெய்வீகக் கலையாக மாற்றினர். இசை என்ற இன்ப வெள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணித்து வளர்த்தனர். கலியுகவரதன் போன்றோர், கலையின் தனித்தன்மை கெடாமல் இறைவனுடன்பரவசமாகும் நிலையை வளர்க்கவேண்டும். அப்போது தான் இசைக்கலை மேலும் வளர்ச்சிபெறும் என்று கூறினார்,

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிவகுருநாதபிள்ளை பேசுகையில் இசையின் பெருமையை நன்கு பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்பு கலைஞர்களுடையதாகும் என்று கூறினார்.

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை தலைமையாசிரியர் பண்டிதர் திரு. க. மயில்வாகனம் பேசுகையில், யாழிசை தமிழ் நாட்டில் வளர்ந்தமுறை ஓர் பெரும் கதையாகும். கலையுலகில் கால்தூக்கி வைக்கும் கலைஞர்கள் இசையின் புனிதத் தன்மையை கட்டிக்காப்பதுடன் மேலும் சிறப்படையச்செய்யவேண்டும் என்று கூறினார்.

திரு. ஏ. சதாசிவம். திரு. வே. இராசமாணிக்கம் உட்பட பலர்வாழ்த்துரை வழங்கினர்.

அரசாங்க

## எழுதுவினைஞர் சங்கத்தை கைப்பற்ற பலத்தபோட்டி

கொழும்பு, சனி

அரசாங்க சேவைத் தொழிற்சங்கங்களில் பிரபல்யம் வாய்ந்த அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்கு இப்பொழுதுபெரும் போட்டி ஏற்பட்டுள்ளது. நிர்வாகிகள் தெரிவு அடுத்த மாதம் 29ந் தேதி நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் பொதுவான அபேட்சகர் பட்டியலைத் தயாரிப்பதற்காகச் சென்ற செவ்வாய்க்கிழமை உயர்கட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தின. எனினும் அவ்விதமான பொது அபேட்சகர் பட்டியல் எதுவும் தயாரிக்கப்படவில்லை.

சங்கத்தின் தற்போதைய நிர்வாகிகளில் சிலர் ஜனவரி 8ல் தமிழ்மொழிச் சட்டத்தை ஆட்சேபித்து வேலைக்குச் சமூகமளிக்காததால் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஐ. ஜே. விக்கிரமா (தற்போதைய தலைவர்), டி. கவிசேன, ஏ. பி. ரஞ்சிகொட ஆகியோர் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவார்களெனத் தெரியவருகிறது.

## "உங்கள் பகுதியை நீங்களே முன்னேற்ற வேண்டும்"

### சனசமூக நிலைய ஆண்டு விழாவில் எம். பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

''ஒரு கிராமத்தைச் சீர்திருத்துவது அக்கிராம மக்களிலேதான் தங்கியிருக்கிறது. இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒளவைப்பிராட்டி அழகாகக் கூறியிருக்கிறார். இங்குள்ளோர் நமது வளர்ச்சிக்கு அரசாங்கத்தை மட்டும் நம்பியிருக்காது தங்கள் முன்னேற்றத்திற்குத் தாங்களே வகை செய்யவேண்டும்'' என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மண்டைதீவு மதிஒளி சனசமூக நிலைய ஆண்டு விழாவில் உரை நிகழ்த்துகையில்குறிப்பிட்டார்.

''மண்டைதீவு மக்கள் தமிழ் ஆர்வம் உள்ளவர்கள். திங்களுக்கொருமுறை விழாவெடுத்து தமிழைப் போற்றி வளர்க்கிறார்கள்'' என்று தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் பேசும்போது கூறினார்.

முடியுடை மூவேந்தர்களையும் ஒற்றுமையுறச் செய்யவும், சமயப்பூசல்களை ஒழிக்கவும், பெண்ணின் பெருமையை உயர்த்தவும் [illegible] ஆக்கியுள்ளார்'' என்று 'சிலம்பின் பரல்கள்' என்னும் பொருள்பற்றி பேசும்போது செல்வி க. பூரணம் குறிப்பிட்டார்.

'தமிழர் வாழ்வும் இலக்கியமும்' பற்றி திரு. ஆ. சண்முகதாஸனும் 'எங்கே செல்கிறோம்' என்னும் பொருள் பற்றி திரு. க. புலமைலோலனும் சொற்பெருக்காற்றினர். பண்டிதை செ. சரஸ்வதி, திரு. க. சொக்கலிங்கம் ஆகியோரும் விழாவில் கலந்து சொற்பெருக்காற்றினர். மேற்படி வைபவத்திற்கு திரு. க. கைலாசபிள்ளை ஜே. பி தலைமை வகித்தார். இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைத் தலைமையாசிரியராக விருந்து ஓய்வுபெறும் திரு. எஸ். ஆர். தம்புவுக்குபாடசாலை மண்டபத்தில், இம் மாதம் 20-ந் திகதி சேவை நலம் பாராட்டு விழா நடைபெறும் வட்டார வித்தியாதரிசி திரு. எம். ஜே. சீமாம்பிள்ளை உட்படப்பலர் அன்னாரின் சேவை நலனைப் பாராட்டி உரை நிகழ்த்துவர்.

## ஐயாறன் எழுதுவது

நீதி அரசர் தம்பையா அவர்கள் வீட்டிலே தினசரி இப்போது என்ன படிக்கிறார் தெரியுமா? பெரிய புராணமும் திருவாசகமும் தானும்! அவர் ஒரு கிறிஸ்தவர் என்றாலும் பெரிய புராணமும் திருவாசகமும் உலக இலக்கியமென்றும் அவற்றைப்படிப்பதால் மிக பயனளிக்கிறதென்றும் தெரிவித்தார்.

கம்பராமாயணத்தை ஓர் ஆசிரியரின் உதவியுடன் தாம் படித்துவந்துள்ளதாயும், அதில் ஒரு சொல்லுக்கே பல பொருள்கள் இருப்பதாயும், ஆனால் சேக்கிழாரின் பெரியபுராண காவியமோ மிக எளியநடையிலே எளிதாக விளங்கக் கூடியதாக இருப்பதால் தாமே படித்து இன்புற முடிகிறதென்றும் சொன்னார்.

அன்று வண்ணை சிவன் கோவில் முன்றலிலே வந்து கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசினாரல்லவா? ஒரு கிறிஸ்தவராக இருந்தும் அவர் சிவாலயத்துக்கு வந்து பேச சம்மதித்ததைப் பற்றி குறிப்பிட்டதும், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று உடன் சொன்னார் நீதியரசர். இதுதான் தமிழரின் உண்மைப் பண்பு. நாடு, மொழி, சாதி, சமயமெனும் குறுகிய வேற்றுமைகளைக் கடந்து, அன்பால் உலகனைத்தையும் வெல்லுபவனே உண்மைத் தமிழன்.

ஃ ஃ ஃ

ஈழத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ அன்பர், தமிழகத்துக்குச்சென்று பல சிவாலயங்கள், விஷ்ணு கோவில்களையெல்லாம் தரிசித்ததாயும், தாம் பெற்ற இன்பத்தை அவர் பெருமையுடன் தம்மிடம் தெரிவித்ததாயும் கிறிஸ்தவ அன்பர் கூறினார்.

கோவில்களில் தாழ்த்தப்பட்ட இந்துக்களை விட வேண்டுமென்ற இயக்கம் தமிழகத்தில் வெற்றிபெற்று அனேகமாக எல்லாக் கோவில்களும் அவர்களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளன. அதுமட்டும் போதாதென்றும்; வேறு சமயத்தவர்களும் விரும்பினால் அவர்களையும் தடைசெய்யாமல் அனுமதிக்கவேண்டுமென்றும், சுவாமி சிவானந்தர் அவர்கள் ஒருசமயம் தெரிவித்தார்கள்.

இது ஒரு மிகப்பெரிய சமூகப் புரட்சி. ஹரிஜனங்களை அனுமதித்ததே ஒரு சமூகப்புரட்சியென்று கூறப்பட்டது. ஆனால் எந்தச் சமயத்தவரும் விரும்பினால் (தக்க ஆசாரத்துடன்) இந்துகோவில்களுக்குச் செல்ல அனுமதிக்கவேண்டுமென்றும் ஒரு புதிய இயக்கம் தமிழகத்தில் தோன்றியுள்ளது.

இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ளவர்களனைவரின் மூதாதையர் அனைவரும் ஒருகாலத்தில் இந்துக்களாக இருந்தவர்கள் தான். சரித்திர, பொருளாதார, சமூகக் காரணங்களால் அவர்களில் பலர் மதம்மாற நேரிட்டதென்றும். ஏகாதிபத்திய ஆதிக்கத்திலே, மதம் மாறினால் தான் அரசாங்க மதிப்பும், உத்தியோகம் முதலிய சலுகைகளும் கிடைக்குமென்றும் கிறிஸ்தவரல்லாதவரை ''பேகன்கள்'' என்றழைத்து அவர்களுக்குச் சொத்துவாரிசு உரிமையும் மறுக்கப்பட்டதாயும், ஒரு வரலாற்று நூலில் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

இந்து, பௌத்த கோவில்கள் பலஇடிக்கப்பட்டதைப்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ இனக்கலவரத்தில் 3 நீக்ரோக்கள் பலி, 70 பேர் காயம்; 200 பேர் கைது

## 3000 அமெரிக்க துருப்புகள் பொலிசாருடன் ரோந்து சுற்றுகிறார்கள்

### சிவில் உரிமைக் கிளர்ச்சி பலாத்காரமாக மாறுகிறது

சிகாகோ, ஜூலை 16

அமெரிக்காவிலுள்ள சக்காகோ நகரில் நீக்ரோககள் பகுதியில் ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்து, 3000 துருப்புக்கள் சேவைக்கு அழைக்கப் பட்டார்கள்.

அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் பொலிசுக்கு உதவி புரியுமுகமாக அழைக்கப்பட்ட இத்துருப்புக்கள், இப்போது கலவரப்பகுதிகளில் ரோந்து சுற்றி வருகின்றன.

சுடப்பட்டால் திருப்பிச் சுடுமாறு இத்துருப்புக்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஏற்பட்ட கலவரத்தில் நீக்ரோக்கள் கட்டடங்களின் ஜன்னல்களை உடைத்தார்கள். கற்களையும், இதர ஆயுதங்களையும் பாவித்தார்கள்.

நேற்றய கலவரத்தில் 3 நீக்ரோக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் 14 வயதுப் பெண். மற்றும் 70 பேருக்கு காயம் ஏற்பட்டது 200 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சிவில் உரிமைக்கிளர்ச்சியின் அஹிம்சைக்கொள்கை மீறப்படுகிறதென்றும், நீக்ரோங்கள் பொறுமையிழந்து பலாத்காரத்தைக் கைக்கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## இருநதிகளை இணைக்க ரூபா 800 கோடி

புதுடில்லி, ஜூலை 16

பிரம்மபுத்திரா நீரை கங்கைக்கு கொண்டு வரும் திட்டம் தயாராகிறதென்றும், இதற்கு 700 முதல் 800 கோடி ரூபாய் செலவாகுமென்றும் பாசனமந்திரி திரு. பக்ருதீன் அலிஅஹமத் கூறினார். இரண்டையும் இணைப்பதற்கு பராக்கா அணை வழிசெய்யும் என்றும் அவர் கூறினார்.

## தென் மேற்கு ஆபிரிக்கா பற்றி உலக நீதிமன்ற தீர்ப்பு

### நாளை வெளியாகும்

ஹேக், ஜூலை 16

மாண்டேட் பிரதேசமான தென்மேற்கு ஆபிரிக்காவில், இன ஒதுக்கல் கொள்கையை தென்னாபிரிக்கா புகுத்தும் விஷயம் குறித்து வருகிற 18-ம் திகதி உலக நீதிமன்றம் வழங்கவிருக்கும் ஒரு தீர்ப்பு வெள்ளையர்-கறுப்பர் உறவில் ஒரு முக்கிய அம்சமாய் விளங்கும்.

6 ஆண்டுகளுக்கு முன் அடிஸ்அபாபாவில் கூடிய சுதந்திர ஆபிரிக்க நாடுகளின் மகாநாடு இவ்விஷயமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யத்தீர்மானித்தது. இதன்படி முன்னாள் சர்வதேச சங்க அங்கத்தினர்களான எதியோப்பியாவும் லைபீரியாவும் உலக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளன.

சர்வதேச சங்கம் ஏற்கனவே செத்துவிட்டதாய் அதன் மாண்டேட் பொறுப்பும் முடிவடைந்துவிட்டதென தென்னாபிரிக்கா வாதாடுகிறது.

தென்மேற்கு ஆபிரிக்கா 3,18,000 சதுரமைல் கொண்டது. ஜனத்தொகை 5,64,000. இதில் 73,000 வெள்ளையர்கள் இருக்கிறார்கள் முதலாவது உலகயுத்த காலம்வரை இது ஒரு ஜெர்மன் காலனியாக இருந்தது.

தென்மேற்கு ஆபிரிக்காவில் ஐ. நா. பார்வையாளர்கள் கோஷ்டியை அனுப்ப வேண்டும் என கடந்த 20 வருடங்களில், 73 தீர்மானங்களை ஐ. நா. நிறைவேற்றியிருந்தது. ஆனால் பலன் எதுவுமில்லை.

—— (பி. டி. ஸி.)

அமெரிக்க ராஜதந்திரிக்கு

## வெளியேறுற உத்தரவு

பிராக், ஜூலை 16

செக்கோஸ்லோவேகியாவிலுள்ள அமெரிக்கத்தூதரின் இரண்டாவது காரியதரிசி, 3 தினங்களில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறார்.

இவர் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாய் அறிவிக்கப்பட்டது.

இரு செக் ராஜதந்திரிகள் அமெரிக்க ராஜாங்க இலாகாவில் எலக்ட்ரோனிக் கருவியை இணைக்க முயன்றதான குற்றச்சாட்டை செக்கோஸ்லோவேகியா மறுத்திருக்கிறது.

## காமராஜருக்கு 64 வயது

சென்னை, ஜூலை 16

அகிலஇந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரின் 63-ம் ஆண்டு நிறைவு நேற்று பல இடங்களில் கொண்டாடப்பட்டது. அவரது 64 வது பிறந்த தினத்தை முன்னிட்டு பல தலைவர்கள் பாராட்டுச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இது ஜனநாயக சோஷலிஸ தினமாகக் கொண்டாடப் பட்டது.

விசேஷ பிரார்த்தனையுடன் பெரிய பொதுக் கூட்டமும், ஊர்வலமும் சென்னையில் இடம்பெற்றன.

திரு. காமராஜரின் நிர்வாகத் திறமை ஸ்தாபகஆற்றல்பற்றி பாராட்டப்பட்டன. திருமதி இந்திரா காந்தி அனுப்பியுள்ள செய்தியில் காமராஜரின் எளிமை லட்சியநோக்கு ஆகியவற்றைப் பாராட்டியுள்ளார்.

தமக்குத் தெரிவித்த பாராட்டுதலுக்கு திரு. காமராஜர் நன்றிதெரிவித்துப் பேசுகையில் ஏழை எளியவர்களுக்கு நீடித்துத் தொண்டுசெய்வதே தமது இறுதியான லட்சியம் என்றார்.

கிரம்ளின் விருந்து:

## மண்டலசார்பற்ற கொள்கையை முறிக்க பெரிய நாடு முயல்கிறது

### சீனு பற்றி இந்திரா பேச்சு

மாஸ்கோ, ஜூலை 16

ஆசிய-ஆபிரிக்க நாடுகள் சில கடைப்பிடித்துவரும் மண்டலசார்பற்ற கொள்கையைப் பலவீனப் படுத்தி, அதைமுறியடிக்க ஆசியாவின் பெரிய நாடு ஒன்று முயல்வதாக இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி காந்தி கிரம்ளினில் தமக்களிக்கப்பட்ட விருந்தில் கூறினார்.

ஸ்ரீமதி காந்தி சீனாவையே இப்படி மறைமுகமாகக் குறிப்பிட்டார் எனக் கருதப் பட்டது.

இப்பகுதிகளில் பதற்றத்தைத்தூண்டிவிட அந்த நாடு முயல்கிறதென்றும், சில நாடுகளுக்கு சமாதானத்தில் நம்பிக்கைகிடையாது என்றும் அவர்தொடர்ந்து கூறினார்.

ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் விருந்தில்பேசியபோது, சர்வதேச பிரச்னைகளில் பாரதமும் ரஷ்யாவும் ஒன்றையொன்று நன்கு புரிந்துகொண்டிருக்கிறது என்றும், சமாதான முயற்சியில் ரஷ்யாவை இந்தியா ஆதரிக்கும் என நம்புவதாயும் கூறினார். வியட்னாமில் அமெரிக்க ஆக்கிரமிப்பை அவர் கண்டித்தார்.

ஸ்ரீமதி காந்தி டெலிவிஷனில் பேசிய ஒரு கட்டத்தில், வியட்னாம் சம்பந்தமாக சர்வதேச நிலைமை கெட்டிருக்கிறதென்றார். வியட்னாம் சம்பந்தமான தமது அமைதித்தீர்வு யோசனைபற்றி அவர் மீண்டும் விண்ணப்பித்துக்கொண்டார்.

வியட்னாம், வெளி குறுக்கீடின்றி தனது விதியை தானே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்றும், வடவியட்னாம் மீது குண்டு வீச்சுநிறுத்தப்பட்டு, அமைதிப்பேச்சு நடைபெறவேண்டும் என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை இயற்ற ரஷ்யா செய்த உதவிக்கு அவர் நன்றிதெரிவித்தார்.

ரஷ்யத் தலைவர்களுடன் ஸ்ரீமதி காந்தியின் பேச்சுக்கள் இன்றுடன் முடிவடைகிறது.

அதேசமயம், ஆப்கானிஸ்தானில் 5 நாள் விஜயத்தை முடித்துக்கொண்ட உபஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹூஸெய்னும் ஆப்கன் மன்னரும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் 1954-ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்த அடிப்படையில் வியட்னாம் பிரச்னையைத் தீர்க்கமுடியும் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

டாக்டர் ஹூஸெய்ன், ஆப்கானிஸ்தானில் எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கானை மும்முறை சந்தித்தார்.

## வட வியட்னும் வானப்பகுதி பலப் படுத்தப்படுகிறது

### அமெரிக்க விமானிகளை தூக்கிலிட்டால் பதிலடியாம்

சைகோன், ஜூலை 16

வட வியட்னும், தனது வானப்பிராந்தியத்தை அதிக மிக் விமானங்களைக்கொண்டு பலப்படுத்திவருவதாக சைகோன் அறிவிப்பொன்று கூறுகிறது.

நேற்று ஹானேய்க்கு உயரே 3ம் ஹைபாங்குக்கு உயரே 1மாக மொத்தம் 4 அமரிக்கவிமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் 2 'மிக் 21' விமானங்களை அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தி மற்றோர் 'மிக் 17' விமானத்தைச் சேதப்படுத்தியதாக மேலும் அறிவிக்கப்பட்டது நேற்றைய தாக்குதலில் வடவியட்னுமிலுள்ள ராக்கெட் தளமும் அடங்கும்.

(2-ம் பக்கம் பார்க்)

## பிரேஸில் தோற்றது! 10லட்சம் டாலரை மறுத்தார்பேல்!!

லிவர்பூல், ஜூலை 16

உலக சாம்பியன் பிரேஸில், இங்கு ஹங்கேரியுடன் நடைபெற்ற உலக உதைபந்தாட்டப் போட்டியில் 3 1 கோல்களால் தோல்வியுற்று, பலரது திகைப்புக்குள்ளாயிற்று. கடந்த 12 ஆண்டுகளில் உலகப் போட்டி எதிலும் பிரேஸில் தோற்றதில்லை. நட்சத்திர வீரர் பேல் பேல் இப்போட்டியில் விளையாடததே. இந்த முதல் தோல்விக்குக் காரணம் எனக் கருதப்பட்டது. பல்கேரியாவுடன் நடைபெற்ற விளையாட்டில் பேல், முழங்காலில் காயமடைந்ததால், அவர் ஹங்கேரியை எதிர்த்து விளையாடவில்லை.

இதர போட்டிகளில் ஸ்பெயின் 2 — 1 கோல்களால் சுவிட்ஸர்லாந்தைத் தோற்கடித்தது. உருகுவே 2 — 1 கோல்களால் பிரான்சைத் தோற்கடித்தது. வடகொரியாவும் சிலியும் தலா 1 கோல் போட்டதால் வெற்றிதோல்வி ஏற்படவில்லை.

பிரேஸில் இந்த விளையாட்டில் தோற்றபோதிலும், வருகிற 30-ம் திகதி இறுதி சாம்பியன் பட்டத்திற்கான போட்டிக்கு வரும் என்பதை எவரும் மறுக்கவில்லை.

இதற்கிடையில், பிரேஸிலின் உதைபந்தாட்ட நட்சத்திரம் பேல், இத்தாலியிலுள்ள மிலான் சர்வதேச கிளப் தனக்கு அளிக்க முன்வந்த 10 லட்சம் டாலர் பணத்தை நிராகரித்துவிட்டார்.

இத்தாலிய கிளப்பில் அவர் சேர ஒப்பந்தம் செய்து கொண்டால், இத்தொகையை அளிப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது என லண்டன் டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கிளவ்டோஸ் என்பவர் எழுதியுள்ளார். கிளப்பின் தலைவர் அஞ்செலோ மொராட்டி, பேலுக்கு இதுசம்பந்தமாக உத்தியோகபூர்வமான கடிதம் எழுதியிருந்தார்.

பேலுக்கு 10 லட்சம் டாலர் தவிர, அவரை அங்கத்தினராகக் கொண்டுள்ள பிரேஸில் சாண்டோஸ் கிளப்புக்கும் குறைந்தது 10 லட்சம் டாலர் அளிக்க இத்தாலிய கிளப் முன்வந்தது.

''எனக்கு இந்தப்பணம் தேவையில்லை. எனது நண்பர்கள் எல்லாம் பிரேஸிலில் இருக்கிறார்கள். இத்தாலிக்குச் சென்றால் நான் இத்தாலிய மொழியைக் கற்க வேண்டும். எனவே எனக்கு இதில் சிரத்தையில்லை'' என பேல் கூறியதாக அறிவிக்கப்பட்டது. (பி டி ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்கு வேலை

சில வாரங்களுக்குப் பின்னர் இப்பகுதி இங்கு மீண்டும் வெளியாவது குறித்து நிச்சயம் மகிழ்ச்சியடைவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். உங்களில் பலருக்கும் சந்தர்ப்பங்கள் கொடுப்பதால் "மூளைக்கு வேலை"யும் இடவசதியைப் பொறுத்து வெளிவர வேண்டியிருக்கிறது.

சரி... இவ்வார கேள்வி மண்டபத்துக்குள் நுழைவோம். இவ்வாரம் உங்களுக்கு ஆறு கேள்விகள் தரப்படுகின்றன. இவை குறிப்பாக இலங்கை - இந்தியா உள்ளிட்டு உலக நிகழ்ச்சிகளுடன் தொடர்பானவை. இக்கேள்விகளுக்குரிய சரியான விடைகளை கண்டுபிடித்து இம்மாதம் 22-ந் திகதிக்கு முன்னர் மாணவர்மலருக்கு அனுப்பி வையுங்கள்.

### கேள்விமண்டலம்

1. 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ந் திகதி உலகுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது எது?

2. 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ந் திகதி இலங்கையில் என்ன நிகழ்ந்தது?

3. இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் எப்பொழுது சேர்ந்தது?

4. 1964-ம் ஆண்டு மே மாதம் 27-ந் திகதி உங்களுக்கு ஏற்பட்ட பேரிடி என்ன?

5. 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ந் திகதி நிகழ்ந்த மோசமான நிகழ்ச்சி என்ன?

6. "அக்டோபர் மாதம் 24-ந் திகதி" என்றால் என்ன?

இங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய விடைகளை மாத்திரம் தபாலட்டையில் எழுதி மாணவர்மலர், 'ஈழநாடு', த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

— சாந்தா

# மாணவர் மலர்

## உங்களுக்குத் தெரியுமா?

### கேள்விகள்

1. உலகிலுள்ள மிகப் பெரிய உப்பு ஏரி எது?
2. கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாட்டில் எத்தனை நூல்கள் உள்ளன?
3. எத்தனை மைல்களை ஓடினால் மரதன் என அழைப்பார்கள்?
4. ஒரு கலன் ஆயநீரின் நிறை என்ன?
5. கூடைப் பந்தாட்டம் எங்கு முதன்முதலாக உருவாகியது?
6. பொலிஸ் படையை ஸ்தாபித்தவர் யார்?
7. கிரிக்கெட்பந்தின் நிறை என்ன?

### விடைகள்

1. கஸ்பியன் கடல்.
2. 39.
3. 26.
4. 10 றாத்தல்.
5. அமெரிக்காவில்.
6. சேர் ரொபேட்போல்.
7. சுமார் 13, 15அவுன்ஸ்.

தொகுத்து அனுப்பியவர்:
அ. துரைரத்தினம்.

## சர்வதேச மொழி எது?

நா. குலேந்திரன்

மத்திய காலத்தில் ஐரோப்பா முழுவதும் பரவியிருந்த ஒரு மொழி லத்தீனாகும். தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் லத்தீன் மொழியே கற்பிக்கப்பட்டு வந்தது. பல மொழி பேசும் அறிஞர்களும் தமது படைப்புகளை லத்தீன் மொழியிலேலே எழுதிவந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டு வரை லத்தீனே பொது மொழியாக இருந்துவந்தது ஆனால் காலகதியில் மக்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மொழிகளை வளர்க்க ஆரம்பித்ததினால் லத்தீன் மொழியின் முக்கியத்துவம் குறைந்தது. ஆயினும் அறிஞர்கள் எல்லோரும் ஒன்றுகூடித் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அவசியம் ஒரு பொதுமொழி தேவையென வாதிட்டு, இறுதியில் பிரெஞ்சு மொழியைப் பொது மொழியாக்கினர். எனவே 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பிரெஞ்சு மொழியே பொதுமொழியாக இருந்துவந்தது

ஆனால் 19ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் உலகம் முழுதும் பரவத்தொடங்கியதாலும் (அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா) ஆகிய ஆபிரிக்க நாடுகளைக் கைப்பற்றி ஆட்சிசெலுத்தத் தொடங்கியதாலும், ஆங்கிலம் மற்ற மொழி பேசும் மக்களிடையேயும் பரவத்தொடங்கியது இன்று அநேக பிற மொழி பேசும் மாணவர்கள் தமது இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தைக் கற்று வருகின்றனர். இன்றுசுமார் 200,000,000 மக்கள் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருக்கின்றனர்.

## வர்த்தகர்கள் கைது

புதுடில்லி, ஜூலை 16

வர்த்தகத்தில் மோசடி செய்தது காரணமாக பஞ்சாபில் 50க்கு மேலான வியாபாரிகள் கைதுசெய்யப்பட்டனர், டில்லியில் நால்வர் பிடிபட்டனர். [illegible]

நமது விஞ்ஞானம்

# இரவில் இனிமேல் பயம் வேண்டாம்!

— ஏ. பி. சந்திரநாதன் —

சுரேஷ், மணி, ஆனந்தன் ஆகிய மூவரும் கடற்கரை மணற்பரப்பில் உட்கார்ந்து கொண்டு, பட்டாணிக்கடலையை மென்று விழுங்கியபடியே சுவாரஷ்யமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

மணி கூறியதை இடைமறித்து ஆனந்தன் கூறினான். "அடே! இருட்டிவிட்டதே. எனக்குப் பயமாக இருக்கிறது வாங்கடா போகலாம்."

"என்னிடம் டார்ச்" இருக்கிறது. வாருங்கள் போகலாம்" என்று எழுந்தான் சுரேஷ் மூவரும் எழுந்த மறு விநாடி ஆனந்தன் அலறினான். "ஐயோ! ஆ! அம்மா!! அதோ பாருடா" கொள்ளிவாய்ப் பிசாசு." மணி கண்களை மூடிக் கொண்ட சுரேஷை இறுகப்பற்றிக் கொண்டான். இவை எல்லாவற்றிற்கும் காரணம் சற்று தூரத்தில் அந்தரத்தில் ஏதோ ஒன்று எரிந்துகொண்டிருந்ததுதான்.

ஆனால் சுரேஷ் சற்றும் பயப்படாமல் "அடே! இதற்கெல்லாம் பயப்படுகிறீர்களே! பாருங்கள் அது என் சொற்படி செய்யச் சொல்கிறேன்" என்றுதைரியமாகக் கூறிவிட்டுக் கொள்ளிவாய்ப் பிசாசுவை நெருங்கினான். ஆனால் மணியும் ஆனந்தனும் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தனர். அதன் அருகே சென்ற சுரேஷ் "ஏய்! கொள்ளிவாய்ப் பிசாசே!! என்னைதுரத்திப்பிடி" என்று கூறிக் கொண்டு ஓடினான். மறுவினாடி! கொள்ளிவாய் பிசாசு அவனைத் துரத்திக் கொண்டு ஓடியது. மணியும் ஆனந்தனும் ஆச்சரியத்தால் செய்வதறியாது விழித்துக் கொண்டிருந்தனர்.

"நில்!" என்று கூறிக் கொண்டே சுரேஷ் நின்றான். பிசாசும் நின்றது. "கொள்ளிவாய்ப் பிசாசை விட்டு வாடா போவாம். அப்பா தேடிக் கொண்டு வந்துவிடப் போகிறார்" என்று மணி கூறினான்.

மூவரும்அவ்விடத்தைவிட்டகன்றனர். சற்றுத்தூரம் சென்றபின் மணி கேட்டான் சுரேஷிடம். எப்படியடா கொள்ளிவாய்ப் பிசாசை அடக்கும் மந்திரத்தைக் கற்றாய்? என்று.

சுரேஷ் சிரித்துக் கொண்டே இதை எனக்கு எங்கள் இரசாயன ஆசிரியர் கூறினார். பிசாசைப்பற்றி அல்ல இந்த இரசாயனப் பொருள் எரியும் விதத்தை என்றான். ஆனந்தனும் மணியும் இடைமறித்து "என்ன? இரசாயனப் பொருள் எரியும்விதமா? அப்படியானால் அது கொள்ளிவாய்ப் பிசாசு இல்லையா?" என ஒருமுகமாகக் கேட்டனர். உங்களைப்போன்ற பயந்தாங்கொள்ளிகளுக்குத்தான் கொள்ளிவாய்ப்பிசாசு உண்டு. உண்மை என்னவென்றால் கடற்கரைகளிலுள்ள சேற்று நிலங்களில் இருந்து சேற்றுவாயு எனப்படும் ஒருவித காற்று உண்டாகிறது. இது இரவு நேரங்களில் எரிகிறது.

ஏன் இரவு நேரங்களில் எரிகிறது பகலில் எரிந்தால் என்ன? என்று சந்தேகத்துடன் வினவினான் மணி.

"பகலில்கடல்குளிராகவே இருக்கின்றது, இரவிலே தான் சூடேறுகின்றது. ஏனெனில் நீர் மெதுவாகவே வெப்பத்தை உறிஞ்சுகின்றது. ஆகவே இரவில் கடலில் இருக்கும் வெப்பத்துடன் சேற்றுவாயு சேர்ந்து எரியும்" என்றான் சுரேஷ்.

"சரி! அப்படியானால் அது எப்படி உன்சொற்படி உன்னைத் துரத்திவர முடியும்" என வினவினான் மணி.

"அதுஎப்படி என்றால் நான்ஓடும்போது என் பின்னால் ஓர்வெளி உண்டாகும். அதைநிரப்ப அருகிலிருந்து காற்று வருகின்றது. அத்துடன்சேர்ந்து சேற்று வாயுவும் விரைந்துவரும். நான் ஓடினால் அதுவும் ஓடும். நான் நின்றால் அதுவும் நிற்கும். இதுதான் "கொள்ளி வாய் பிசாசு" என்றான் சுரேஷ்.

நாங்கள் உன்னால் ஒரு பெரிய உண்மையை அறிந்து கொண்டோம். உனக்கு எம் இதயபூர்வமான நன்றிகள் இனி இரவில் எங்களுக்குப் பயமே வராது என்றனர் ஆனந்தனும் மணியும்.

## கி. வா. ஜ. இலங்கைவிஜயம்

மாவிட்டபுரம், சனி

இம்மாதம் இலங்கைக்கு விஜயம்செய்யவிருந்த வித்துவான் கி. வா. ஜகந்நாதன் தமது வருகையை ஒருவார காலத்திற்கு மேலும் பின் போட்டுள்ளார்.

ஆகஸ்ட்மாதம் 15-ந்தேதி இலங்கைக்கு வர இருக்கும் கி. வா ஜெகந்நாதன் இரு வாரகாலம் இலங்கையில் தங்கி, பல பொதுநிகழ்ச்சிகளிற் கலந்துகொள்வார்.

துப்பறியும் தொடர் நவீனம்

# சோலை வனம்

— கே. ரி. இராசசிங்கம் —

அந்த இரண்டு உருவங்களும் மொட்டையனும், குட்டையனும்- அறையைவிட்டு அகன்றபின்பு இராமு கட்டிலில் இருந்து அவர்கள் இருவரும போய்விட்டார்கள் என்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டே மெதுவாக அறைக் கதவினைத் திறந்தான். அறைக்கதவு ஏதும் ஓசையின்றி திறந்து கொண்டது. கீழ்த்தளத்து உபரி மாடத்தில் நின்றவாறே மேல்தளத்து உபரி மாடத்தினை நோட்டம்விட்டான். அங்கு ஒரே இருள். திடீரென பயங்கரமான மின்னல் ஒளி கண்ணைப் பறிக்க அந்த ஒளியின் துணையில் அவன் மூன்பு போனபோது அங்கு இருந்த டாக்டர் மோகனையோ, என் தேகி கட்டிலில்படுத்திருந்த இளம் பெண்ணையும் சிறுமியையுமோ காணவேயில்லை. ஏதோ யோசனையில் மாடிப்படி வழியாக இறங்கிவந்த இராமு ஸ்தம்பித்துபோய் நின்றான். அப்பொழுது மேல்மாடி உபரிமாடத்திற்கு அருகில் உள்ளஅறை ஒன்றில் மங்கலான வெளிச்சம் வருவதைகண்டுகொண்டான். சற்று அவதானமாக அவன் கவனித்தபொழுது அங்கே ஏதோ நடமாட்டம் நிகழ்வதையும் யாரோ ஏதோ பேசுவதையும் அவனால் கவனிக்கமுடிந்தது.

சிலநிமிடங்களுக்குப் பிற்பாடு அறையினுள்ளிருந்து ஓர் உருவம் வெளியேறி இருட்டுடன் கலந்துகொண்டது. மேலும் சிறிதுநிமிடங்கள் அப்படியே நின்றுவிட்டு அறைக்குள் சென்ற இராமு சைக்கிளில் பொருத்தியிருந்த 'பக்' டேப்றெக்கோடரின் இயக்கத்தினை திறந்திவிட்டு அதனைக்கேட்கத் தொடங்கினான். அதில் கதவின் கிறீச்சிட்ட ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து சுவாசிக்கும் ஓசையும் மணிக்கூண்டின்டிக்,டிக் ஒலியும் கேட்டது. இதைத் தொடர்ந்து மீண்டும் கதவு திறக்கும் ஓசையும்'தடால்' என்று விழுந்த துப்பாக்கியின் ஓசையும்......' 'அவன் முந்திக் கொண்டான்.........' என்ற மெறுவான முணுமுணுப்பு மடையன் என்ற வார்த்தையும் கேட்டன.

யார் இந்த மொட்டையனும் குட்டையனும்......'

ஏன் இவர்கள் எனது உடமைகளையும் என்னையும் இப்படிப் பரிசோதிக்க வேண்டும்...? என அவன் தனக்குள் குழம்பியபொழுது ...குட்டையன் அவன் தலையணைக்கு கீழ் வைத்த உறையின் ஞாபகம் வரவே...... தலையணையை நிமிர்த்திப் பார்த்தான். அங்கே ஓர் உறை இருந்தது. அதனை எடுத்து திறந்தபொழுது உள்ளே...

மண்டை ஓடும் இரண்டு எலும்புகளும் பொறித்த ஓர் கடிதம் இருந்தது. அதைத் தனது டோர்ச் விளக்கின் துணையுடன் படித்தான். "எச்சரிக்கின்றேன்... எனது விடயத்தில் குறுக்கிடாதே...' உனதுஉயிருக்கே எமனாகிவிடுவேன்."

—ஜம்பு.

என்றிருந்தது. அதனைப் படித்துவிட்டு சில நிமிடங்களில் கட்டிலில் நீட்டிநிமிர்ந்தவாறே படுத்துக்கொண்டான்.

மறுநாள் விடிந்தவுடன், பணியாள் செல்லப்பா காப்பியுடன் இராமுவின் அறைக்குள் நுழைந்தான். அவனுடன் அந்தச் சிறுமியும், வந்திருந்தாள். அந்தச் சிறுமி செல்லப்பாவோடு நெருங்கி நின்றவாறே இராமுவை மிரள, மிரளப் பார்த்துவிட்டு "இந்த ஆள் யார்?" எனச் சிறுமி கேட்டாள். "பாப்பா இவர் ஓர் சைக்கிள் ஓட்டக்காரர் இராத்திரி வந்தவர்..." என்று கூறிவிட்டு... "வாங்கோ நாம் போவோம்..." என்றான். "இல்லை செல்லப்பா நான் நின்று இந்த மாமா எழுந்த பிற்பாடு கதைக்கவேணும்.. நீ வேண்டுமென்றால் போ..." என்று கூறிவிட்டு இராமு படுத்திருந்த கட்டில் கால்மாட்டில் அமர்ந்து கொண்டாள்.

அவன் போனதுதான் தாமதம்..."மாமா... மாமா..." என அச்சிறுமி இராமுவை எழுப்பினாள்.



சிந்திவிட்ட
சூப்பர் குயிங்
ரேயல் புளூ
வர்ஷபிளேயிட்டுத்
துக்கிக்காதீர்!
கழுவி விடலாம்!
உங்கள் பேனவை எந்நேரமும் துப்புரவாக வைத்திருப்பதற்கு அவசியமான சொல்வ் - எக்ஸ் கொண்டது. சூப்பர் குயிங்கில் மட்டுமே இது உண்டு. நிரந்தரமான எழுத்துக்கு மங்காத நீலம், கரு நீலம், டர்குயிஸ், சிவப்பு, பச்சை அல்லது கறுப்பைத் தேர்ந்தெடுங்கள்.
ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,
மகாராஜா கட்டிடம்
பாங்ஷால் வீதி, கொழும்பு.
பார்க்கர் பென் கம்பனியின் ஒரு தயாரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
நீர்ப்பபாசனத் திணைக்களம்

என் 1667 - யாழ்ப்பாண உப - பிரிவி லுள்ள முறிகண்டி - அக்கிராயன்குளம் ரோட்டில் 2-ம் கட்டையிலிருந்து 5-ம் கட்டை வரைக்கும், அத்தோடு இரணை மடுத் திட்டத்திலுள்ள கெனடி வீதிக்கும் கல்லுக் குவிப்பதற்குக் கேள்விகள் முடிவு திகதி 9-8-66.

சுகாதாரப் பகுதி

என் 1619 - மட்டக்களப்பு சுகாதார சேவைப் பகுதியில் சமைத்த / சமைக் காத உணவுகள் வழங்குதல். கேள்வி கள் முடிவு திகதி 4-8-66.

என் 1704 - மட்டக்களப்பு சுகாதார சேவைப் பகுதியில் பசும் பாலும், பால் மாவும், சீனியும் எற்றிச்சென்று விநி யோகித்தல். கேள்விகள் முடிவு திகதி 4-8-66.

இதன் முழு விபரங்களுக்கும் 15-7-66 இல் வெளியான அரசாங்க வர்த்த மானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதி யைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறை வரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும். உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்க ளிலும் பார்வையிடலாம். 3619

## பம்பாய் காலியாகாது

பம்பாய், ஜூலை 16

பெருமழை காரணமாக பம்பாயைக் காலிசெய்யும் திட்டம் கைவிடப்படும் என அறிவிக்கப்படுகிறது.


REGAL—JAFFNA
NOW SHOWING
FERNANDEL
in
THE
COW AND I

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 9-30'
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம் ஜி ஆர் – சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6 30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
நாகேஷ் - கே.ஆர். விஜயா
நடித்த
சர்வர் சுந்தரம்


## "தமிழ்ப் பல்கலைக்கழக கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது"

### நெல்லியடியில் திரு. அமிர்தலிங்கம் தகவல்

உடுப்பிட்டி, சனி

"எம்மைப்பற்றிக் குறை கூறுவோரும் எம் மத்தியில் இருக்கத்தான் வேண்டும். நாம் திருந்தி நடக்க அவர்கள் துணைபுரிகிறார்கள். தமிழரசுக்கட்சி சாதித்தது என்னவென்று எதிர்க்கட்சி யினர் மேடைகளில் பேசி வருகின்றனர். வடக்கு கிழக்குமக்களிடையே இதுவரை காலமும் காணப்படாத புதிய ஐக்கியம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. 1956-ம் ஆண்டுக்குப் பின் தமிழ்மக்களிடையே புதிய சூழ்நிலை தோன்றியுள்ளது" என்று நெல்லியடி தமிழரசு வாலிபமுன்னணியின் ஆண்டு விழா நேற்றுமாலை மட்டக் களப்பு முதலாவது எம். பி. திரு. இராசதுரை தலைமையில் நெல்லியடியில் நடைபெற்றபொழுது திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் கூறினார். திரு. க. ஜெயக்கொடி வரவேற்புக் கூறினார்.

### தமிழரைப் பிரதமர் நேசிக்கின்றார்

தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாவது:—

"நாங்கள் மந்திரி சபையில் சேர்ந்துள்ளபொழுதிலும், எங்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிமீது தமிழரசுக்கட்சி பெரிதும் நம்பிக்கை வைத்துள்ளது. நாங்கள் அரசினரிடம் 'பிச்சை' வாங்க மாட்டோம். நியாயமான முறையில் போராடியே எம் உரிமையை மீட்போம். எமது பிரதமர் தமிழ் மக்களை மிகவும் நேசிக்கிறார்".

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது,

### "பல்கலைக்கழகம்"

கலை, விஞ்ஞானம் ஆகியவற்றை இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் இனமத வேறுபாடின்றி வடக்குகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர் பயிலக்கூடியவசதிகள் நிறைந்த ஒரு பரிபூரண தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இக் கோரிக்கையை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுவிட்டது.

விழா ஆரம்பத்தில் தமிழரசு வாலிப முன்னணியின் நெல்லியடிக் கிளையினர் சுமார் ஐந்நூறு சைக்கிள்களில்வதிரியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு விழாமண்டபத்தை அடைந்தனர்,

கோப்பாய் எம். பி கதிரவேலுப்பிள்ளை, கிளிநொச்சி எம், பி. சா. பொ. இரத்தினம், திருமலை எம். பி. எஸ் எம். மாணிக்கராசா, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், வழக்கறிஞர் திரு. எம். வேலும்மயிலும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், அகில இலங்கை தமிழரசு வாலிப முன்னணி செயலாளர் திரு. மு. பழனியப்பன் ஆகியோரும் பேசினர். திரு. க. செ. சுவர்ணராசா நன்றிகூறினர்.

## கி மு. சங்கம் அனுதாபம்

உரும்பராய், சனி

"ஆயுர்வேத வைத்தியத் திற்கேபெருமைதேடித்தந்த வைத்திய மேதையும் தமது வைத்தியத் திறமையால் தமிழ்பேசும் மக்கள் யாபேரினதும்அபிமானத்தைப்பெற்றவரும், பல்வேறுபட்டசமூகத்தொண்டுகளில் ஈடுபட்டு அமைதியுடனும். அடக்கத்துடனும் உழைத்துத் தமிழினத்தின் பொதுநவ அபிவிருத்திக்காகப் பாடுபட்டவருமாகிய வைத்திய கலாநிதி கே. சி. சண்முகரத்தினத்தின் அகால மறைவு இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்பட்ட ஈடு செய்யமுடியாத ஓர் பெரும் நஷ்டமாகும்".

உரும்பராய்வடக்குகிராம முன்னேற்றச் சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு ஆ முத்தவேலு தலைமையில் நடைபெற்ற பொழுது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வைத்தியகலாநிதியின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிட மௌனமும் அநுஷ்டிக்கப்பட்டது.

## புத்தகப் படிப்புடன் நின்றுவிடாதீர்!

### மாணவருக்கு எம். பி. கூறுகிறார்!

வவனியா, சனி

"கல்விப்படிப்புடன் மட்டும் மாணவர்கள் நின்றுவிடாதுதேகப்பயிற்சி, உடற்பயிற்சி போன்றவற்றிலும் பங்குபற்றினால்தான் எதிர்காலத்தில் திடகாத்திரமுள்ளவர்களாகத் திகழலாம்"

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்தவிளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவனிய எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

## பிரதேசகலாமன்ற இசைவிழா

வல்வெட்டித்துறை, சனி

வடமராட்சிப்பகுதி பிரதேச கலாமன்றம் செப்டம்பர் மாதத்தில் இசை விழா வொன்றை நடத்த இருக்கிறது. இவ்விழாவில் வாய்ப்பாட்டு, வில்லுப்பாட்டு, நடனம், நாடகம் முதலியன இடம்பெறும்.

இவ்விழாவில் யாழ். அரசாங்க அதிபர், மாவட்ட நீதிபதி, ... ஆகியோர் கலந்துகொள்வார்கள்.


3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | விஜிதா (ஹட்டன்)

பி. ப. 2, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள். ஆனால் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்

ஆடலழகி ஜெயலலிதா,
புதுமுகம் ஸ்ரீகாந்த்
நிர்மலா, மூர்த்தி, ஆஷா
மற்றும் பலர் நடித்த
சித்ராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்

"வெண்ணிற ஆடை"

(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


## வரி விளம்பரம்

### தேவை

நெசவாளர்!

கைத்தறி நெசவுவேலையில் நன்கு அனுபவமுள்ள பெண்களும்; பழக விரும்புவோரும்; சேலைகளுக்கு குஞ்சம் (டசல்ஸ்) இணைக்கும் அனுபவமுள்ள பெண்களும் தேவை. லீயோ டெக்ஸ் வீவிங் இன்டஸ்றீஸ், 45, ஜும்மா மொஸ்குலேன் (பாட்டா மேல்மாடி) யாழ்ப்பாணம். 756

### சோதிடம்

சாதகபலன் ரூபா 2-00, ரேகை பலன் ரூபா 2-00, ஆருட பலன் ரூபா 1-00. எஸ். சிவகுமாரன் அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 768

### வைத்தியம்

நொய்வு, கசம், நீரிழிவு நீரந்தி முதலிய மன கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்ற லோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

ஒலிபெருக்கி செற் மிகவும் உன்னத நிலையில் உள்ளது பல மேலதிக உபகரணங்கள் உண்டு. விலை சகாயம் பார்வையிடவும்: மோஹன்ஸ், உத்தரவுபெற்ற மின்சார இணைப்பாளர்களும் றேடியோ திருத்துபவர்களும் மெயின் வீதி, சங்கானை. 767

கைத்தொழில் ஸ்தாபனம்

ஓர் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்- பெறுமதியுள்ள லைசென்சுடன். தொழில் தொடர்ந்துநடைபெறுகிறது. போட்டியே இல்லாத தொழில். விபரங்களுக்கு விளம்பர இல: 762, ஈழநாடு மே/பா என்றவிலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 762

எஞ்ஜின்

57 குதிரைப் பவர் லிஸ்ரர் என்சின் 3 பேஸ், றேடியேற்றர் கூல், செல்வ்ஸ்ராட், 48 கிலோ உவாற் ஜெனறேற்றர் செற், சுவிச்போட்டுடன் சோமஜிறீ 7-ம் நம்பர் கல்லர் புதியது. பெனன்சூலர் இன்டஸ்ரியல் கம்பனி லிமிட்டெட், மந்திகை, பருத்தித்துறை. 763

மெசின் வண்டிகள்

10" உயரமும் 2" கனமுங் கொண்டறபர்ரையர் சில்லுகள் பொருத்தப்பட்ட தண்ணீர் இறைக்கும் மெசின் வண்டிகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வேலழகன் தொழிற்சாலை, சுன்னாகம். ஒன்றின் விலை ரூபா 150/- 760

வீடு:

நாவற்குளியில் அரசாங்க கட்டிடங்களுக்கு அருகாமையில் வீடுவளவு விற்பனைக்கு உண்டு. விபரம் — விலை — க. சின்னையா— கணக்கர் நாவற்குளி. 752

காணி

யாழ்ப்பாணம்-நாவற்குழி கண்டி வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மனுச்செய்யவும் 383, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7113. 765

## மாணவர் கஷ்டம்

சங்கானை. சனி

சங்கானை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் ஒருவரும் உதவி ஆசிரியர் ஒருவரும் சில கிழமைகளுக்கு முன் இடமாற்றம் செய்யப்பட்டும் இன்னும் அவ்விடம் காலியாகவுள்ளதெனத் தெரியவருகின்றது.

இதனால் அங்கு கல்வி பயிலும் மாணவர்கட்குப் பெருங்கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## இட்லி கிடைக்கும்

சென்னை, ஜூலை 16

சென்னை ஹோட்டல்களில் இட்லி தடைசெய்யப்படமாட்டாது என முதல்மந்திரி பக்தவத்சலம் கூறினார். இட்லி தடைசெய்யப்படும் என பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்ததை அடுத்து முதல்மந்திரி இத் தகவலைக் கூறினார்.

## நடிகையின் இரகசிய திருமணம்

பாரிஸ், ஜூலை 16

நடிகை ரொனிஷ்னீடர் மேற்குஜெர்மன் பட உற்பத்தியாளர் ஹரி ஹாபன்ஸ் டாக்கை இங்கு இரகசியமாகத் திருமணம்செய்து கொண்டார். (பி. டி. ஐ.)

## வெள்ளத்துக்கு ரூபா 60 கோடி சேதம்

ஷில்லாங், ஜூலை 16

அஸ்ஸாம் வெள்ளத்தினால் ரூபா 60 கோடிக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.


"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட
○ ரீ சேட்
● ரெறி சேட்
● ரெறி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● கால்மேஸ
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிச் சரித்திரத்தில்படிக்கிறோம். மதத்தின் பெயரால் அக்காலத்தில் நடந்த பல கொடுமைகளுக்கெல்லாம் தப்பி, பலர் மதம் மாருமல் இருந்து வருவது ஆச்சரியமே.

மதங்கள் எல்லாம் மிகவும் புனிதமானவை. ஒவ்வொரு மதத்துக்கும் வெவ்வேறு கடவுள் இருப்பதாக யாரும் சொல்லமாட்டார்கள். அவர் ஒருவர்தான் எல்லாருக்கும் பொதுவானவர். அப்படி இருக்க மதங்களின் பெயரால் நாம் ஏன் சச்சரவிடவேண்டும்? மத மாற்றங்கள் எதற்கு?

மதமாற்றம் செய்யும் காலம் மலையேறிவிட்டதாகவும், ஏகாதிபத்திய சக்திகளே, மதமாற்றத்தை ஒரு கருவியாக உபயோகித்து வந்ததாயும், பெரியாரொருவர் கொழும்பில் ஒரு கூட்டத்தில் பகிரங்கமாகக் கூறிஞராம்.

மதமாற்றங்கள் இன்னும் நடந்து தான்வருகின்றன. சமூக, பொருளாதாரத் தேவைகளை பல சமூகத் தலைவர்களும் ஜனநாயக அரசாங்கமும் பூர்த்திசெய்வதாயின் மதமாற்றங்களுக்கு அவசியமே ஏற்படாது.

சமயவிஷயத்தில் பொது மக்களிடையே சமரச மனப்பான்மை வளர்ந்து வருவதால், இனி சமயத்தின் பெயரால் மக்களிடை பிரித்துவைக்கும் ஏகாதிபத்திய முயற்சிகள் வெகுவாகப் பலிக்காதென்றே சொல்லலாம்.

ஃ ஃ ஃ

மெய்யானைத் தன்பக்கல் விரும்புவார்க்கு விரும்பாதவரும் பாவியவர்கட்கென்றும், பொய்யானைப் புறங்காட்டி லாடலானைப்பொன் பொதிந்த சடையானைப் பொடிகொள்பூதிப், பையானைப் பையரவ மசைத்தன் தன்னைப்பரந்தானைப் பவளமால் வரைபோல் மேனிச், செய்யானைத் திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்னெறிகட் சேராதாரே.

—அப்பர் சுவாமிகள்

## வட்டுக்கோட்டையில் பலிநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டுக்கோட்டை கிழக்கில் உள்ள முத்துமாரியம்மன் கோவிலில் பலிநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இக்கோவிலில் பலியிடுதல் நடைபெற்றுவந்தது. இந்த வருடத்திலிருந்து வருடாந்த உற்சவத் திருவிழாக்களைச் செய்ய கோயில் நிர்வாகிகளே முன்வந்துள்ளனர்.

இம்மாதம் 12-ம் திகதி தொடக்கம் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி திருவிழாக்கள் நடைபெற்றுவருகின்றன. இறுதிநாளன்று விசேஷ அலங்காரத் திருவிழா நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளது.

சுமார் 12 வருடங்களின் முன்னர் ஊர் இளைஞர்களும் மற்றும் சமூகசேவா மன்றங்களும் பலியை நிறுத்துமாறு சத்தியாக்கிரகம் செய்தும், நீதிமன்றத்தில் அதையொட்டி வழக்கு நடைபெற்றும் கூட பலியிடுதலை நிறுத்த மறுத்த நிர்வாகிகள் இப்பொழுது தாமே பலியிடுதலை நிறுத்தியுள்ளனர்.

## வடவியட்னும் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் 18 அமெரிக்க செனட்டர்கள் வடவியட்னுமுக்கு விடுத்துள்ள விண்ணப்பம் ஒன்றில் அமெரிக்க விமானிகளைத் தூக்கிலிடவேண்டாம் என்றும், அப்படிச்செய்தால் தீவிர பதில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அமெரிக்க பொதுஜன அபிப்பிராயம் தூண்டுமென்றும் கூறியிருக்கிருர்கள்.

வியட்னும் பிரச்னையைத் தீர்க்க ஸ்ரீமதி காந்தி தெரிவித்த யோசனைகளைக் கம்போடியா வரவேற்றிருக்கிறது.

இந்த யோசனை வெற்றி பெற்ருலும், பெருவிட்டாலும் படிப்படியாக ஒரு தீர்வுக்கு அது வழிவகுக்கக்கூடுமென கம்போடிய அரசாங்கம் கூறியுள்ளது.

அதேசமயம் ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டுவதில் அமெரிக்கா தொடர்ந்து முயலுமென வெள்ளை மாளிகை அதிகாரியொருவர் கூறினர்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் இன்று மாஸ்கோ புறப்படுகிருர். ரஷ்யப் பிரதமர் கோஸிஜினுடன் அவர் வியட்னும் பற்றிப் பேச்சு நடத்துவார்.

வியட்னும் நெருக்கடிக்கு மேற்கு நாடுகளின் தலையீடே காரணமென பிரான்ஸ்-கம்போடியா கூட்டறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கை நேற்று பாரிஸில் வெளியிடப்பட்டது.

## இந்தியாவுக்கு ரஷ்யா, அமெரிக்கா அதிக கடன் உதவி

### ஸ்ரீமதி காந்தி இன்று தாயகம் திரும்புகிருர்

மாஸ்கோ, ஜூலை 16

அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் ரஷ்யா; இந்தியாவுக்கு 40 கோடி பவுண் வழங்கும் எனக் கூறப்படுகிறது. அதேசமயம் இந்தியாவின் சுயதேவைப் பூர்த்திக்காக அமெரிக்காவும் அதிகக்கடன் உதவி வழங்க இருக்கிறது.

ஸ்ரீமதி இந்திராகாந்தியின் விஜயத்தை அடுத்து சோவியத் கடன் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திட்டப்படி 1970-ம் ஆண்டு பொக்காரோ உருக்காலை அமைப்பதற்கும் ரஷ்யா உதவும்.

அமெரிக்க உணவு மந்திரி திரு பிரிமன் புதுடில்லியில் இன்று நிருபர்களிடம்பேசிய போது, இந்தியாவின் ஜனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப உற்பத்தியும் துரிதமாகப் பெருகவேண்டியது அவசியம் எனக் கூறினர். உணவு உற்பத்தியில் இந்தியாவின் சுயதேவைப் பூர்த்திக்கு, இன்னும் அதிக அளவில் அமெரிக்கா கடனுதவி வழங்கும் என்றும் அவர்கூறினர்.

ஸ்ரீமதி இந்திரா காந்தி இன்று மாஸ்கோவிலிருந்து தாயகம் புறப்படுமுன் சோவியத் கம்யூனிஸ்கட்சி பொதுக் காரியதரிசி திரு. பிரஸ்ரேவைச் சந்தித்துப் பேசினர். அதன்பின் சோவியத்ஸ்காயா ஹோட்டலில் ஸ்ரீமதி இந்திராகாந்திக்கு, வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஒரு விருந்தளித்தனர். பின் பத்திரிகை நிருபர்கள் மகாநாடு ஒன்றிலும் ஸ்ரீமதி காந்தி பேசினர்.

## புதிய நிர்வாகிகள்

வவுனியா, சனி

அரசாங்க எழுதுவினைஞர் சங்க வவுனியாக் கிளையின் வருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு அ இரத்தினசிங்கம், உபதலைவர்: திரு ச முருகேசு, செயலாளர்: திரு செ பஞ்சலிங்கம், துணை செயலாளர்: திரு க திருநாவுக்கரசு, பொருளாளர்: திரு பொ நாகராசா, துணைப் பொருளாளர்: திரு இ பொன்னுத்துரை. 7 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## இ.போ.ச. பஸ்ஸில் ஆடுகள்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

இ.போ.ச. பஸ் ஒன்றுக்குள் கொழுத்துப் பெருத்த இரு கடா ஆடுகள் பிரயாணம் செய்தசம்பவம்நேற்று மாலைநடந்திருக்கிறது. அச்சுவேலியிலிருந்து உடுப்பிட்டியினூடாக பருத்தித்துறை சென்ற பஸ்ஸிலேயே இந்த ஆடுகள் பிரயாணம் செய்தன.

அச்சுவேலியில் இந்த ஆடுகள் ஏற்றப்பட்டன. ஒரு பஸ் கண்டக்டர் இந்தஆடுகளின் சொந்தக்காரராக இருந்ததாலேயே இந்த விசேஷ சலுகை கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக இ.போ.ச அதிகாரியொருவரிடம் நமது நிருபர் விசாரித்தபோது, பிரயாணிகளுக்கு இடைஞ்சல் விளைவிக்கக் கூடிய கோழிக்குஞ்சுதானும் [illegible] தெரிவித்தார்.

## தீர்மானங்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டது. கூட்டம் பின்னர் பிற்பகலும் நடைபெற்றது.

### உபகுழுக்கள் நியமனம்

தமிழ் மொழிச்சட்ட விசேஷ விதிகள் அமுல் செய்யப்பட்டு வருவதை ஆராய்வதற்காக உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு தமிழ்மொழிச் சட்ட விசேஷ விதிகள் எவ்விதமாக அமுல் செய்யப்படுகிறது என்பது குறித்தும் அதனை அமுல் செய்யப்படுவதில் ஏற்படும் கஷ்டங்கள் பற்றியும் ஆராய்ந்து வரும் இக்குழுவில் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. ஏ. அமிர்தலிங்கம் (அமைப்பாளர்), டாக்டர் ஈ. எம் வி. நாகநாதன், செனட்டர் மாணிக்கம் ஆகியோரும் இருப்பார்கள்.

### பல்கலைக்கழகம்

தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்துத் துரிதமான நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது. இக்குழுவில் திருவாளர்கள் எஸ். எம். இராசமாணிக்கம், சி. எக்ஸ் மார்ட்டின், மசூர் மௌலா, எஸ்.எம். மாணிக்கராஜா, வி. நவரத்தினம், எஸ். கதிரவேற்பிள்ளை (அமைப்பாளர்) மந்திரி திருச்செல்வம் ஆகியோர் உள்ளனர்.

மாவட்டசபைகள் அமைப்பது குறித்து ஆராய்ந்தறிவதற்கும் அது சம்பந்தமான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்காகவும் நியமிக்கப்பட்ட குழுவில் திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், எஸ். எம். இராசமாணிக்கம், வி. நவரத்தினம், ஏ. அமிர்தலிங்கம், (அமைப்பாளர்), மந்திரி எம். திருச்செல்வம், டாக்டர் ஈ. எம், வி. நாகநாதன், ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாதிவேற்றுமையை நீக்கும் பொருட்டு கல்முனையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்செய்வதற்கும் தீவிரமான புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்காகவும் திரு. வி. என். நவரத்தினத்தை அழைப்பாளராகக்கொண்ட உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமுலிலிருக்கும் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்துக்கு பார்லிமெண்டில் திருத்தம் கொண்டுவரவும் தீவிரமான முறையில் அச் சட்டங்களை அமுல் செய்யவும் இக் குழு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

மாவட்டசபையில் சிறுபான்மை சமுகத்தினருக்கு பிரதிநிதித்துவம் அளிப்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆமோதிக்கப்பட்டது.

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில் இன்று மாலை 6 மணி முதல் 7-30 மணிவரை திரு. ஆறுமுகம் 'திருவிளையாடல்' பிரசங்கத் தொடரில் 'பேருவை சென்டால் அடித்தது' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

## தீண்டாமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மந்திரி திருச்செல்வம் மேலும் பேசும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அச்சுவேலியில் சகல வசதிகளும் கொண்ட வீடமைப்புத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளதாகவும், நான்கு ஐந்து மாதங்களில், இத் திட்டம் செயல் படுத்தப்படுமென்றும் கூறினர்.

தீண்டாமையை ஒழிக்க சட்டரீதியாக நடவடிக்கை எடுப்போம் சட்டத்தை மாற்றி தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் தேநீர் கடைகளின் லைசென்சை, ரத்து செய்ய நடவடிக்கை எடுப்போம். கிராமங்களில் ஆலயங்கள் திறந்து விடப்படவில்லையென இங்கு கூறப்பட்டது. இது பழைய பிரச்னை. இதை லரலாறுதான் தீர்க்கும். 25 வருடங்களில் இப் பிரச்னை தானுகவே தீர்ந்து விடும்.

தமிழ்பேசும் மக்களுக்கு முதல் தேவையானது சமஷ்டி அமைப்பு. மற்றது தமிழ்ப்பல்கலைக்கழகம் கனடாவில், பிரான்ஸ், ஆங்கிலம் பேசுபவர்கள் இருக்கிருர்கள். சுவிட்சலந்தில் 3மொழி பேசுகிருர்கள். பெல்ஜியத்தில் 2மொழிபேசுகிருர்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு இனத்திற்கும் பூரண பல்கலைக்கழகம் உண்டு. அதேபோல் தமிழ் பேசும் இனத்திற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டும்.

56ம்ஆண்டுதமிழ்பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, 10 லட்சம் ரூபா சேமிக்கப்பட்டு, திருமலையில் காணியும் வாங்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென 18 தமிழ்பேசும் எம். பி க்கள் கோரியுள்ளார்கள்.

திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஈ.எம். வி.நாகநாதன், ஏ, அமிர்தலிங்கம், எஸ். இராசதுரை. எம். மாணிக்கராசா மற்றும்பலர் பேசினர்கள்.

## ஆகஸ்ட் 9-ல் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் விமானநிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் அழைத்துவரும் வழியில் செய்யவேண்டிய வரவேற்பு ஒழுங்குகளையும், மற்றும் மகாநாட்டு ஒழுங்குகளையும் கவனிப்பதற்காக ஒரு வரவேற்புச்சபை தெரிவு செய்யப்பட்டது.

மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களை இம்மாத இறுதிக்குள் பொதுச் சபைக்கு அனுப்பி வைக்கும்படி தமிழ்க்காங்கிரஸ் கிளைகளையும், வாலியமுன்னணி கிளைகளையும் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

முதல் இரு நாட்களும் கலைநிகழ்ச்சிகள் யாழ் திறந்த வெளியரங்கில் அமைக்கப்படும் சேர் ஆனந்தகுமாரசாமி அரங்கில் நடைபெறும். அரசியல் மகாநாடு, மாதர் மகாநாடு, தொழிலாளர்மகாநாடு ஆகியவை யாழ் நகர மண்டபத்தில் அமைக்கப்படும். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்கில் நடைபெறும் மூன்ருவது நாள் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்கா கலந்துகொண்டு உரைநிகழ்த்துவார்.

ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் வாலிப முன்னணியினரின் சயிக்கிள் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், வாலிப முன்னணி மகாநாட்டிற்கு, திருமலை, மட்டக்களப்பு மற்றும் பகுதிகளிலிருந்தும் ஏராளமான வாலிபர்கள் கலந்துகொள்வார்களென்றும், வாலிப முன்னணிச்செயலாளர்திரு. எஸ். சிறிதரன் கூறினர்


## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கோவில்வீதியில் (Temple Road) கைலாயபிள்ளையார் கோவிலருகில் இரண்டு பரப்புகாணி, புதிய கிணறு, நல்ல தண்ணீர். விசாரணைகள்: 29-4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 758

கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### அறிவித்தல்

விற்பனைப் பகுதி உட்பட இக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகப்பகுதி 18-7-66 தொடங்கி கொழும்பு 2இல் உள்ள 356 யூனியன் பிளேசில் இயங்கும். வியாபார நிமித்தம் நேரடியாகதொடர்புகொள்ள விரும்புபவர்கள் வர்த்தகப் பகுதியுடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். ஆயினும், கடிதங்களானது தொடர்ந்து இக் கந்தோர் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும்.

70, யோர்க்வீதி, கொழும்பு-1, 12-7-1966.

பொது முகாமையாளர், கிழக்குப் பகுதிக் கடதாசிஆலைக் கூட்டுத்தாபனம்.

665


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org